செ.வெ.எண்: 17 நாள்: 06.07.2021

# கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி உயிரியல் பூங்கா, நேரு விளையட்டரங்கம் ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி உயிரியல் பூங்கா, நேரு விளையட்டரங்கம் ஆகிய பகுதிகளில் இன்று(06.07.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் திரு.ராஜ கோபால் சுன்கரா இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட விளையாட்டு நல அலுவலர் திரு.ரவிச்சந்திரன், மாநகர பொறியாளர் திரு.இலட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள வ.உ.சி. மைதானம், உயிரியல் பூங்கா, நேரு விளையாட்டரங்கம் ஆகியவை மாநகராட்சி சார்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நேரு விளையாட்டரங்கம், விளையாட்டு வீரர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு பயிற்சி மேற்கொள்ளும் இடமாக இருந்து வருகிறது. வ.உ.சி. மைதானம், உயிரியல் பூங்கா, நேரு விளையாட்டரங்கம் ஆகியவை 46.26 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியில் உயிரியல் பூங்காவில் புணரமைப்பு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி, வ.உ.சி. உயிரியல் பூங்கா, மற்றும் அதன் அருகில் உள்ள விளையாட்டு மைதானம், இயற்கை பூங்கா, குழந்தைகள் பயணிக்கும் தொடர் வண்டி இருப்புபாதை, விலங்குகளுக்கான அறை, நீரூற்று, பீரங்கி, ஆகியவற்றின் மாதிரி வடிவமைப்புகள் மற்றும் புல்தரைகள் உள்ளிட்டவைகளை புணரமைப்பு

பணிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்து, நேரு விளையாட்டுத்திடலின் அருகிலேயே பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம், உலகத்தரத்திலான நீச்சல்குள வளாகம், மாணவர் விளையாட்டு விடுதி, உள்ளிட்டவை அமைத்திடவும், கைப்பந்து, பூப்பந்து, கபடி, கூடைப்பந்து, கோ-கோ ஆகிய விளையாட்டுகளுக்கான உள்விளையாட்டரங்கம் அமைப்பது தொடர்பாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**